# கிள்ளான் ஜி எம் பேரங்காடியில்

# சபா மாநில தயாரிப்புகள் அறிமுகம்

● பி.ஆர்.ஜெயசீலன்

கிள்ளான், மார்ச் 12 -

நாட்டின் பெரிய மொத்த வியாபார சந்தையாகத் திகழும் கிள்ளான் ஜி எம் பேரங்காடியில் சபா மாநில தயாரிப்பு பொருட்களின் அறிமுகம் தொடக்க விழா கண்டது.

வெள்ளிக்கிழமை காலை அப்பேரங்காடியின் வளாகத்தில் நடைபெற்ற தொடக்க விழாவை தொழில் முனைவோர், கூட்டுறவு அமைச்சர் பூங் ஜின் ஸி அதிகாரப் பூர்வமாக தொடக்கி வைத்தார். சபா மாநில தயாரிப்பிலான பொருட்களை இங்கு அறிமுகப்படுத்தப்படுத்துவதன் வழி இரு வழி வணிகங்கள் மேம்பாடு அடையும் என அவர் குறிப்பிட்டார். அம்மாநில தயாரிப்புகள் குறுகிய வட்டத்திற்குள் அடங்கி விடாமல் தீபகற்ப மலேசியாவிலும் விரிவாக்கப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டார். சபா மாநில தயாரிப்புகளான பதனிடப்பட்ட உணவு வகைகள், கைவினைப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், துரித உணவு வகைகள் போன்றவை இங்கு வணிகத்திற்கு வைக்கப் பட்டிருப்பதையும் குறிப்பிட்டார்.

சிறுதொழில் வியாபார வணிகமாக செயல்படத் தொடங்கியுள்ள இந்த வணிகம் சபா மாநிலத்திற்கு வழங்கப்பட்டுள்ள முதல் தொடக்கம் எனக் குறிப்பிட்ட அமைச்சர், எதிர்காலத்தில் வளமாக காலூன்றுவதற்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது என தெரிவித்தார். சபா மாநில தயாரிப்புகள் பிரசித்திபெற்றவை. அவை தீபகற்ப மலேசியாவிற்கு வருவதற்கு 1600 கிலோமீட்டர் தொலைவைக் கொண்ட கடல் பிரித்தாலும் கிள்ளான் ஜி எம் பேரங்காடி ஓர் உறவுப் பாலத்தை ஏற்படுத்திக் கொடுத்திருப்பது பாராட்டுக்குரியது.



சபா மாநில வியாபார மையத்தை அமைச்சர் திறந்து வைத்தபோது...

இங்குள்ள வணிகர்களும் சபா மாநில தயாரிப்புகளை வாங்கி வியாபாரம் செய்யலாம் என தெரிவித்தார்.

இதனிடையே, கிள்ளான் ஜி எம் மொத்த வியாபார சந்தையின் தலைமைச் செயல் அதிகாரி டத்தோ லிம் செங் கொக் பேசுகையில், இந்த பேரங்காடியில் பலதரப்பட்ட பொருட்களை வியாபாரம் செய்யும் நூற்றுக்கும் மேற்பட்ட கடைகள், உணவகங்கள், துரித உணவுக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இங்கு சபா மாநில தயாரிப்புகளை வியாபாரம் செய்வதற்கும் மொத்த வணிகம் மேற்கொள்வதற்கும் வாய்ப்பு வழங்குவதில் மகிழ்ச்சியடைவதாக குறிப்பிட்டார்.

இருபதுக்கும் மேற்பட்ட சமையல் சம்பந்தப்பட்ட பொருட்கள், துரித உணவு வகைகள், கைவினைப்பொருட்கள், கைப்பைகள், அலங்காரப் பொருட்கள் ஆகியவை கொண்ட சபா மாநில தயாரிப்புப் பொருட்கள் அடங்கிய கடை முதல் அந்தப் பேரங்காடியில் செயல்படத் தொடங்கியது.



கடைகளில் உள்ள பொருட்களை பார்வையிட்டபோது...